எனவே, இப்படி வெளியிடப்படுவது இதுவே கடைசி முறையாக இருக்கும் என்று நம்புகிறேன். இனி இம்மாதிரி நிகழுமானால், விதிகளின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட பத்திரிகைகளுக்கு எச்சரிக்க விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

5. அறிக்கை அளித்தல்

உறுப்பினர்களின் விடுதிகளில் கடைப்பிடிக்க வேண்டிய நெறி முறைகள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதிகளில் கடைபிடிக்க வேண்டிய சில நெறி முறைகளைக் குறித்து ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாள் அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்களும் அவைக் குழு உறுப்பினர்களும் கூடி, சில பல முடிவுகளை எடுத்தார்கள். அந்த முடிவுகளை நான் அறிவிக்க விரும்புகிறேன். அந்த முடிவுகளுக்கு சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் உரிய மதிப்பளித்து, அதைக் கடைப்பிடிக்க ஒத்துழைப்பு தருவதோடு, மற்ற பொது மக்களும் அதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அனைவருடைய ஒத்துழைப்பின் பேரில் இந்த விதி முறைகள் ஓரளவுக்கு வரையறை செய்யப்பட்டிருக்கின்றன.

பேரவை, மேலவை கூடும் நாட்களில் உறுப்பினர்களைக் காண வரும் பார்வையாளர்கள் உறுப்பினர்களைக் காண்பதற்கு மாலை 3·00 மணியிலிருந்து 6·00 மணிவரையில் என்று நிர்ணயிக்கப்படுகிறது. பேரவை, மேலவை கூடாத நாட்களில் இந்நேரம் காலை 9·00 மணியிலிருந்து மாலை 6·00 மணி வரை என்று நிர்ணயிக்கப்படுகிறது. இம்மாதிரியான பார்வையாளர்கள் முதலில் வரவேற்பாளர்கள் மூலமாக உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பெற்று, உறுப்பினர்கள் பார்வையாளர்களை அறைகளுக்கு அனுப்ப இசைவு தெரிவித்த பின்பே அவர்களை உறுப்பினர்களது அறைகளுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படும். மற்ற நேரங்களில் பார்வையாளர்கள் உறுப்பினர்களைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

உறுப்பினர் அறையில் உறுப்பினருடன் குடும்பத்தினர் அன்றி மற்றவர்கள் தங்கக் கூடாது. குடும்பத்தினர் என்ற சொல்லில் தாய், தந்தை, துணைவியர், குழந்தைகள் மட்டும்தான் அடங்கும். அவர்களும் உறுப்பினர்கள் அறையில் தங்கியிருந்தாலன்றி தனியாகத் தங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறு தங்குவதாக இருந்தால், 5 நாட்களுக்கு மேல் தங்கக் கூடாது. இதற்கான கட்டணம் ஏதும் இல்லை. மற்ற நாட்களில் அதாவது பேரவை, மேலவை மற்றும் குழுக்கள் கூடாத நாட்களில் தற்போதுள்ள விதிகளின்படி கட்டணம் வசூலிக்கப்படும்.

குடும்பத்தினருடன் தங்குவதாக இருப்பின் முன் கூட்டியே தெரிவித்து அதற்குண்டான பதிவேட்டில் பதிவு செய்து கையொப்பம் இடுதல் வேண்டும்.

உறுப்பினர்களுக்கு அரசினால் வீடுகள் ஒதுக்கப்பட்டு இருந்தாலும் அல்லது அவர்களுக்குத் தங்குவதற்குச் சென்னையில் வீடுகள் இருக்குமானால் அவர்களுக்குத் தங்கும் விடுதியில் அறைகள் ஒதுக்கப்பட மாட்டாது.

உறுப்பினர்கள் சென்னையை விட்டு வெளியே செல்லும் நேரங்களில் அறைகளை அலுவலகத்தில் ஒப்படைத்துவிட்டு செல்லலாம். அவ்வாறு செய்யாவிடில் அதற்கான வாடகை தற்பொழுதுள்ள விதிகளின்படி வசூலிக்கப்படும்.

சில முக்கியமான விதிகள் மட்டுமே மேலே கூறப்பட்டுள்ளன. மற்ற விதிகள் உறுப்பினர்களுக்குச் சுற்றறிக்கை மூலம் அனுப்பப்படும்.

மேற்கண்ட விதிகள் 23—4—1981 ஆகிய இன்று முதல் அமுலுக்கு வரும். இதற்கென சட்டம் அல்லது அதற்குண்டான விதிகள் திருத்தப்பட வேண்டியிருப்பின் அவை தகுந்தபடி திருத்தி அமைக்கப்பட்டு இந்தத் தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் சென்னையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், எங்களுக்கு சென்னையில் வீடுகள் இருக்கின்றன. ஆகவே எங்கள் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தயவு செய்து அவை முன்னவர் அவர்கள் எங்களுக்கும் அறைகள் ஒதுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பேரவை, மேலவை உறுப்பினர்கள் தங்கல் இல்லாமல் அறைகளுக்குப் போய் விட்டு வரலாம். மற்றவர்களைப் போல உறுப்பினர்கள் காத்திருக்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கேட்பது அதுவல்ல. அவர்கள், சென்னையிலே இருக்கின்றவர்கள், வீடுகள் வைத்திருக்கின்ற உறுப்பினர்களுக்கு, தனியாக அறைகள் ஒதுக்க வேண்டும் என்று கேட்கின்றார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : தயவு செய்து தாங்கள் முடிவு சொல்ல வேண்டும். ஏனென்றால் எங்களுக்கு அடிக்கடி அறைகளைச்காலி செய்யும்படி நோட்டீஸ் வந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏகமனதாக ஒருமித்து எடுத்த முடிவுதான் இது. இதில் பல சங்கடங்கள் வருகின்றன. எனவே, இந்த முடிவை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று அவை உறுப்பினர்கள் அத்தனை பேர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.